<u>**Sub Court, Eraniel**</u>

**O.S. No.64/2024**

**Date**: 27.10.2025.

வா.சா.1 - திரு. சஜித்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி எங்களது வங்கியிலிருந்து ரூ.4,30,000/- கடன் பெற்றார். அது சிறு தொழில் செய்பவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் என்றால், சரிதான். கடனுக்கு 9.5 சதவீதம் வட்டி அந்த காலகட்டத்தில் குறிக்கப்பட்டது. அது மாறுதலுக்கு உட்பட்டது. முத்ரா திட்டத்தின் கீழ் சொத்து ஜாமீன் எதுவும் கேட்க கூடாது என்றால், சரிதான். அந்த திட்டத்தில் CGFMU அமைப்பின் கீழ் கடன் வசூலிக்கப்பட வேண்டும் என்றால், சரிதான். இந்த வழக்கில் CGFMU அமைப்பினை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். அந்த அமைப்பிலிருந்து நாங்கள் தொகை எதுவும் வசூலிக்கவில்லை. பிரதிவாதியின் கடனுக்கு காப்பீடு எடுக்கப்பட்டு உள்ளது. பிரதிவாதி இதுவரையில் திருப்பி செலுத்திய தொகை எவ்வளவு என்பதை கோப்புகளை பார்த்தால் தான் என்னால் சொல்ல முடியும். வழக்குரையில் பிரதிவாதி கடன் தொகையை திருப்பி செலுத்தியதாக நாங்கள் குறிப்பிடவில்லை. முதல் விசாரணையில் பிரதிவாதி ரூ.80,841.27 /- திருப்பி செலுத்தியதாக குறிப்பிட்டுருக்கிறேன் என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. கடன் கணக்கு விபரங்களை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யலாம். பிரதிவாதி ரூ.80,841.27 /- வங்கிக்கு திருப்பி செலுத்தியுள்ளதை, கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் வங்கியில் தாக்கல் செய்யப்பபட்டிருக்கும் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதியின் கடன் கணக்கு எந்த தேதியில் NP ஆனது என்ற விபரத்தை வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால்,

நவம்பர் 2021ல் NP ஆனது. 20.03.2023ல் பிரதிவாதி வங்கியில் வந்து உயிர்ப்பித்தல் கடிதம் எழுதிக் கொடுத்தது பற்றிய வீடியோ பதிவுகள் வங்கியில் இருக்குமா என்றால், 90 நாட்கள் வரை தான் வீடியோ பதிவுகள் இருக்கும். நான் பிரதிவாதியின் computer spare parts கடைக்குச் சென்று நான் Revival Letter ல் கையெழுத்து வாங்கினேன். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதிக்கு எதிராக அவரை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால், Regional Office–ல் இருந்து புகார் கொடுக்கப்பட்டது. தவறான தகவல்கள் உடனும், முறையான கட்சிகளை இந்த வழக்கில் கட்சி சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்,